# தடுப்பு ஊசிகளும் தடுமாறும் விசுவாசிகளும்


## வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்


மருத்துவரிடம் சென்றால் அவர்கள் ஊசி போட்டு நம்மை கொடுமைப்படுத்துவார்கள் என்னும் பயம் நம் எல்லோருக்கும் சிறுபிராயத்தில் இருந்திருக்கும். இதனால், மருத்துவரிடம் செல்ல வேண்டும் என்று பெற்றோர் கூறும்போது, "ஊசி போடாத வைத்தியரிடம் கூட்டிச் செல்லுங்கள்" என்று அடம்பிடித்து அழுதவர்களாகவே நாம் இருந்திருப்போம். எனினும், அது ஊசி ஏற்படுத்தும் வலியைப்பற்றிய அச்சத்தினால் ஏற்படும் அலறலாகவே இருக்கும். ஆனால், இப்பொழுது வளர்ந்து பெரியவர்களாகிய பின்பும் நாம் ஊசிகளுக்குப் பயப்படுகிறவர்களாய் இருந்தால், அது அர்த்தமும் அவசியமும் அற்ற அறிவீனமான ஒரு செயலாகும். அப்படியிருந்தும், இன்றைக்குப் பல கிறிஸ்தவர்கள், வேதாகம சத்தியங்களை சரியாக அறியாதவர்களின் தாறுமாறான தவறான போதனைகளை உண்மையென்று நம்புவதினால், கொரோன தடுப்பு ஊசிகளைப்பற்றிய அச்சத்துடன் சிலரும் அலட்சியத்துடன் பலரும் இருக்கின்றனர். ஏனெனில், தொற்று நோய்கள் நம்மைத் தொடாமல் இருப்பதற்கு தடுப்பு ஊசியே சரியான பாதுகாப்பைத் தரும் என்பதை ஏற்றுக்கொள்ள மனமற்ற நிலையில், தற்காலத்தில் பல தவறான தாறுமாறான போதனைகள் கிறிஸ்தவர்களைத் தடுமாற வைத்துள்ளன. இதனால், இத்தகைய போதனைகளை வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமாய் உள்ளது.

ஒவ்வொரு காலத்திலும் சில கிறிஸ்தவ குழுக்களும், ஒருசில வேதப் புரட்டு உபதேசங்களும் மருத்துவரிடம் செல்வதையே பாவமான செயலாகவும் அவிசுவாசத்தின் அடையாளமாகவும் கருதியுள்ள போதிலும், தற்காலத்தில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கொரோனா தடுப்பு ஊசிகளை அந்திகிறிஸ்துவின் முத்திரையாகவும், தேவனை அவமதிக்கும் அவிசுவாசச் செயலாகவும் கருதுகின்றனர். ஆனால், உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பே அந்திகிறிஸ்து வெளிப்படுவான் என்று வேதாகமம் கூறுவதினால், உலகில் சபை இருக்கும் தற்காலத்தில் வந்துள்ள கொரோனா தடுப்பு ஊசிகளை அந்திகிறிஸ்துவோடு தொடர்புபடுத்துவது வேதாகம சத்தியத்தையே முரண்படுத்தும் தவறான செயலாகவே உள்ளது. மேலும், வேதாகம சத்தியத்தின்படி மருந்துவரிடம் செல்வது அவிசுவாசத்தின் அடையாளமும் அல்ல. ஆனால், மருந்தின் மூலம் ஒருவரை சுகப்படுத்தி அவரை வாழவைக்கக் கூடியதாக இருக்கும்போது, மருத்துவ உதவியை நாடுவது பாவம் என்று போதிப்பது, வியாதியினால் பாதிக்கப்பட்டவரைக் கொலை செய்யும் அளவுக்கு கொடூரமான ஒரு பாவச் செயலாகவே உள்ளது. அதேசமயம், மருந்துகள் எடுப்பது தேவனுக்கு எதிரான ஒரு செயலும் அல்ல. ஏனெனில், தேவன் மருந்துகள் மூலமும் மனிதரை சுகப்படுத்துகிறவராக இருக்கின்றார். இதனால், கொரோனா தடுப்பு ஊசிகள் அந்திகிறிஸ்துவின் அடையாளமா? அல்லது இது அவிசுவாசத்தின் அடையாளமா? என்பதை வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

## அந்திகிறிஸ்துவின் அடையாளமா?

கொரோனா தடுப்பு ஊசிகளைப்பற்றி கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் முக்கியமான தடுமாற்றம், இது அந்திகிறிஸ்துவின் அடையாளம் என்னும் அறிவீனமான எண்ணமாகும் இதனால், கொரோனா தடுப்பு ஊசியின் மூலம் மனிதருடைய சரீரத்தில் அந்திகிறிஸ்துவின் முத்திரை போடப்படுகிறது என்றும், தடுப்பு ஊசி போட்டவர்களை அந்திகிறிஸ்து தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருகின்றான் என்றும் கிறிஸ்தவர்கள் தவறான கருத்துடையவர் களாய் இருக்கின்றனர். இதனால், அந்திகிறிஸ்து என்பவன் யார்? இவன் எப்பொழுது வருவான்? இவனுடைய முத்திரை எப்பொழுது மனிதருக்குப் போடப்படும்? கொரோனா தடுப்பு ஊசிகளுக்கும் அந்திகிறிஸ்துவுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கின்றதா? என்னும் கேள்விகளுக்கான பதில்களை இப்பகுதியில் ஆராய்ந்து பார்ப்போம். அடுத்த பகுதியில், தடுப்பு ஊசிகள் போடுவதும் மருந்துகள் எடுப்பதும் அவிசுவாசத்தின் அடையாளமா? என்னும் கேள்விக்கான பதில் வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராயப்பட்டுள்ளது.

அந்திகிறிஸ்து என்னும் சொல் வேதாகமத்தில் யோவான் எழுதிய நிருபங்களில் மொத்தம் ஐந்து தடவைகள் மாத்திரமே காணப்படுகின்றது. எனினும் இது ஒரு தமிழ் சொல் அல்ல. ஏனெனில்,

வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள் "அன்டிகிறிஸ்டொஸ்" என்னும் கிரேக்கச் சொல்லை மொழிபெயர்க்காமல், ஆங்கிலத்தில் அதை "அன்டிகிரைஸ்ட்" என்று எழுதியதினால், நம்முடைய தமிழ் வேதாகமத்தில் இதை அந்திகிறிஸ்து என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்கத்தில் அன்டிகிறிஸ்டொஸ் என்பது "கிறிஸ்துவுக்கு எதிரானவன்" என்னும் அர்த்தமுடைய ஒரு சொல்லாகும். எனவே, அன்டிகிறிஸ்டொஸ் என்னும் சொல்லை நாம் மொழிபெயர்த்து 1யோவான் 2:18ஐ எழுதினால், "கிறிஸ்துவுக்கு எதிரானவன் (அந்திகிறிஸ்து) வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடியே, இப்பொழுதும் கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள் (அந்திகிறிஸ்துகள்) அநேகர் இருக்கின்றார்கள்" என்றே யோவான் குறிப்பிட்டுள்ளார் என்பதை அறிந்திடலாம். உண்மையில், இயேசுகிறிஸ்து இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்த காலத்திலிருந்தே அவருக்கு எதிரானவர்கள் பலர் இருந்தனர். கிரேக்க மொழியில் இவர்கள் அனைவரையும் அன்டிகிறிஸ்டொஸ் (அந்திகிறிஸ்து) என்றே கூறவேண்டும். இதனால்தான், யோவானுடைய நிருபத்தில் இச்சொல் ஐந்து தடவைகள் இடம்பெற்றாலும், ஒரேயொரு தடவை மாத்திரமே அந்திகிறிஸ்து என்று தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் யாரைக் குறிப்பிடுகின்றனரோ அவனைப் பற்றிய குறிப்பாக உள்ளது. ஏனைய இடங்களில், தன்னுடைய காலத்தில் இருந்த வேதப் புரட்டர்களையே கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள் என்னும் அர்த்தத்தில் யோவான் இவ்விதமாக அழைத்துள்ளார். மேலும், 1யோவான் 2:18இல் அந்திகிறிஸ்து என்னும் சொல்லை யோவான் இரண்டு தடவைகள் உபயோகித்தாலும், தன்னுடைய காலத்தில் இருந்த வேதப்புரட்டர்களைக் குறிப்பிடும்போது இதைப் பன்மையிலும், எதிர்காலத்தில் வரும் உலக ஆட்சியாளனைக் குறிப்பிடும்போது ஒருமையிலும் குறிப்பிடுவதன் மூலம், இரண்டு இடத்திலும் இச்சொல்லின் அர்த்தத்தை வேறுபடுத்தியும் காண்பித்துள்ளார்.[1] இதனால், "இப்பொழுதும் அநேக அந்திகிறிஸ்துகள் இருக்கிறார்கள்" என்று யோவான் கூறவதினால், உலகின் இறுதி ஆட்சியாளனான அந்திகிறிஸ்து இப்பொழுதே உலகத்தில் இருக்கின்றான் என்று எண்ணுவது தவறாகும். ஏனெனில், கிறிஸ்துவுக்கு எதிரானவர்களே இப்பொழுது உலகத்தில் இருக்கின்றார்கள். ஆனால், உலகத்தின் இறுதி ஆட்சியாளன் இன்னும் வரவில்லை. ஏனெனில், உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பே அவன் வருவான்.

உலகின் இறுதியில் முழு உலகையும் தன்னுடைய ஆளுகையின் கீழ் வைத்திருப்பவனை இன்றைக்கு நாம் அந்திகிறிஸ்து என்றே அழைத்தாலும், 1யோவான் 2:18ஐத் தவிர ஏனைய வசனங்களில் இவன் "பாழாக்கும் அருவருப்பு" (தானி.9:27, 12:11, மத்.24:15) "கேட்டின் மகனாகிய பாவ மனுஷன்" (2தெச.2:3), "அக்கிரமக்காரன்" (2தெச.2:8-9) என்றும், வெளிப்படுத்தல் புத்தகத் தரிசனங்களில் "மிருகம்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளான் (வெளி.13:1-7, 13:14-18, 17:8, 17:11, 19:19-20). எனினும், இவன் கிறிஸ்துவுக்கு எதிரானவனாக இருப்பதினால்தான், யோவான் இவனை "அன்டிகிறிஸ்டொஸ்" அதாவது, அந்திகிறிஸ்து என்று குறிப்பிட்டுள்ளார் (1யோவா.2:18). கிரேக்க மொழியில் ஒரு சொல்லுக்கு முன் "அன்டி" என்னும் சொல்லைச் சேர்க்கும்போது, "அதற்கு எதிரானது" அல்லது "அதற்கு பதிலாய் இருப்பது" என்னும் அர்த்தத்தைக் கொடுக்கும். எனவே, உலகத்தின் இறுதி ஆட்சியாளன் கிறிஸ்துவுக்கு எதிரானவனாய் மாத்திரமல்ல, கிறிஸ்துவுக்குப் பதிலாகத் தன்னையே கிறிஸ்துவாக, "அதாவது மேசியாவாக"[2] மக்களுக்கு காண்பிப்பவனாகவும் இருப்பான்.[3] உண்மையில், வெளிப்படுத்தல் புத்தக தரிசனத்தின்படி, யுத்தமொன்றில் மரணமடையும் இவன் சாத்தானால் உயிர்ப்பிக்கப்படுவ தினால், மக்கள் எல்லோரும் இவனைத் தெய்வமாகவே ஏற்றுக்கொள்வார்கள் (வெளி.13:3-4).[4]

---

[1] D.Hiebert, *The Epistles of John: An Expositional Commentary*, p. 109.

[2] மேசியா என்னும் எபிரெயச் சொல்லின் கிரேக்க மொழிபெயர்ப்பான கிறிஸ்டொஸ் என்பதே தமிழில் கிறிஸ்து என்று எழுதப்படுகிறது.

[3] R.Law, *The Tests of Life: A Study of the First Epistle of St.John*, p. 132; C.Vaughan, *1,2,3John: Bible Study Commentary*, p. 62.

[4] வெளிப்படுத்தல் 13:3-4இல், "அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன். ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 14ஆம் வசனத்தில் "பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகம்" என்னும் வாக்கியத்தில் பிழைத்த என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லே வெளிப்படுத்தல் 2:8இல் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது.

இதனால், கிரேக்க மொழியில் அன்டிகிறிஸ்டொஸ் என்னும் பெயர் இவனுக்கு மிகவும் பொருத்தமானதாகவே உள்ளது. இதனால்தான், வேதாகமத்தில் இவனைக் குறிப்பிடும் பாழாக்கும் அருவருப்பு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன், மிருகம் என்னும் பெயர்களைவிட அந்திகிறிஸ்து என்னும் பெயரே கிறிஸ்தவ உலகில் பிரபலமடைந்துள்ளது.

அந்திகிறிஸ்துவைப்பற்றி வேதாகமம் வெளிப்படுத்தியுள்ள விஷயங்களைக் கருத்திற்கொள்ளும் போது, இவன் உலகத்தின் இறுதி ஆட்சியாளனாக இருப்பது மாத்திரமல்ல, முழு உலகத்தையும் தன்னுடைய ஆளுகையின்கீழ் வைத்திருப்பான். ஆனாலும், இதுவரைகால உலக சரித்திரத்தில், வேதாகமம் கூறுகின்ற விதமாக எந்த ஒரு அரசனும் முழு உலகையும் தன்னுடைய ஆளுகையின் கீழ் வைத்திருக்கவில்லை. பல நாடுகளை உள்ளடக்கிய பெரும் சாம்ராஜ்யங்கள் இவ்வுலகில் இருந்துள்ள போதிலும், இவற்றில் எந்த ஒரு ராஜ்யமும் முழு உலகையும் ஆளுகை செய்யும் பேரரசாக இருந்ததில்லை. இதனால், இதுவரையில் அந்திகிறிஸ்து வெளிப்படவில்லை என்பது தெளிவாகின்றது. ஆனால், ஒவ்வொரு காலத்திலும் கிறிஸ்தவர்கள் தங்களுக்கு எதிராக இருந்த ஆட்சியாளர்களை அல்லது மதத் தலைவர்களை அந்திகிறிஸ்துவாகவும், தாங்கள் வாழும் காலத்தைக் கடைசிக் காலமாகவும் எண்ணிக் கலக்கத்துடனும் குழப்பத்துடனும் வாழ்ந்துள்ளனர்.[5] இதைப்போலவே, தற்காலத்திலும் கொரோனா கிருமிகளைக் கடைசிக் காலத்தின் அடையாளமாகக் கருதும் கிறிஸ்தவர்கள், கொரோனா தடுப்பு ஊசிகள் மூலம் அந்திகிறிஸ்துவின் முத்திரை மனிதருக்கு போடப்படுவதாக எண்ணிக் கலக்கமடைந்துள்ளனர். ஆனால், அந்திகிறிஸ்துவின் முத்திரை மனிதனுடைய சரீரத்திற்குள் ஊசியின் மூலம் ஒரு திரவ மருந்தாகச் செலுத்தப்படுவதில்லை. ஏனெனில், இது மனிதருடைய வலது கைகளில் அல்லது நெற்றிகளில் போடப்படும் ஒரு அடையாளமாகவே இருக்கும் என்றே வெளிப்படுத்தல் 13:16-17இல் குறிப்பிடப்பட்டுள்ளது.[6] அதுமாத்திரமல்ல, அந்திகிறிஸ்துவின் ஆட்சி இன்னும் ஆரம்பமாகவும் இல்லை. எனவே, கொரோனா தடுப்பு ஊசிகளைப்பற்றி கலக்கமடைவது, இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்து பயமடையும் பரிதாபமான ஒரு செயலாகவே உள்ளது.

உலகத்தின் இறுதியிலேயே அந்திகிறிஸ்து வெளிப்படுவான் என்றாலும், அவன் வருவதற்கும் முன்பே இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அவயவங்களாய் இருக்கும் கிறிஸ்தவர்களா கிய நாம்,[7] இவ்வுலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவோம் என்றும் வேதாகமம் கூறுகிறது. இதனால், கொரோனா தடுப்பு ஊசிகள் மூலம் தற்காலத்தில் அந்திகிறிஸ்து தன்னுடைய முத்திரையை மனிதர்களுக்குப் போடுகிறான் என்னும் போதனை, வேதாகம சத்தியத்தையே அறியாத தவறான ஒரு வேதப்புரட்டு உபதேசமாகவே உள்ளது. ஏனெனில், அந்திகிறிஸ்து வருவதற்கும் முன்பே சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதை 2தெசலோனிக் கேயர் 2ஆம் அதிகாரம் நேரடியாகவே அறியத்தருகின்றது. மேலும், இவ்வதிகாரத்தில் இயேசு

---

[5] வேதாகம சத்தியத்தின்படி இயேசுகிறிஸ்துவின் முதல் வருகைக்கும் இரண்டாவது வருகைக்கும் இடைப்பட்ட காலமே கடைசிக்காலமாகும். இதனால்தான், முதலாம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை எழுதியவர்கள் தாங்கள் கடைசிக் காலத்தில் வாழ்வதாகக் குறிப்பிட்டுள்ளனர் (அப்.2:16-17, 1பேது.1:20, எபி.1:2, 1யோவா.2:18, யாக்.5:3). இதைப்பற்றிய முழுமையான விளக்கத்திற்கு எனது “கொரோனா கிருமிகளும் கொல்லப்பட்ட கிறிஸ்தவர்களும்” என்னும் நூலின் முதலாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[6] வெளிப்படுத்தல் 13:16-17இல், “அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும் படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[7] கிறிஸ்தவர்களாகிய நாம் சபையாக இருப்பது மாத்திரமல்ல, சபையாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் சரீரமாகவே இருக்கின்றோம். இதனால்தான், “சபையாகிய சரீரம்” (கொலொ.1:18), “சரீரமான சபை” (எபே.1:23) என்னும் சொற்பிரயோகங்கள் சபையைக் குறிப்பிட வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன. ஏனெனில், இரட்சிக்கப்படும் மக்களைச் சபையில் சேர்க்கும் இயேசுகிறிஸ்து (அப்.2:47), அவர்களைத் தம்முடைய சரீரத்தின் அவயவங்களாக்குவதன் மூலமாகவே சபையைக் கட்டிவருகின்றார். இதனால்தான், “நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள்” (1கொரி.12:27) என்றும், “நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்” (எபே.5:30) என்றும், “அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாய் இருக்கிறோம்” (ரோ.12:5) என்றும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நாம் தொலை தூரத்திலிருந்து இயேசுகிறிஸ்துவோடு தொடர்பு கொள்கிறவர்களாக அல்ல, பிரிக்க முடியாதபடி அவரோடு இணைந்துவிட்ட அவருடைய சரீரத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றோம். இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையைப்பற்றி வேதாகமம் போதிக்கும் சத்தியங்களை முழுமையாக அறிந்துகொள்வதற்கு விரைவில் வெளிவரும் எனது “திருமறை போதிக்கும் திருச்சபை” என்னும் நூலைப் பார்க்கவும்.

கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் இரண்டு அம்சங்களைப்பற்றியும் பவுல் விளக்கியுள்ளார். அதாவது, இயேசுகிறிஸ்து உலகிலிருந்து சபையை எடுத்துக்கொள்வதையும், அந்திகிறிஸ்துவின் ஏழு வருஷ உலகளாவிய ஆட்சியின் பின்னர்,[8] அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட சபையுடன் பகிரங்கமாக இவ்வுலகத்திற்கு வருவதையும் விரிவாக எழுதியுள்ளார்.[9] இதனால்தான், ‘‘அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால்’’ (2தெச.2:1) என்று பவுல் இவ்வதிகாரத்தை ஆரம்பித்துள்ளார். எனினும், இவ்வசனத்தில் ‘‘இயேசுகிறிஸ்துவின் வருகை’’ என்பது அவருடைய பகிரங்க வருகையையும், ‘‘நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவது’’ என்பது சபை மக்களாகிய நாம் உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவதையும் குறிக்கின்றது.[10] சில கிறிஸ்தவர்கள், இவ்விரண்டு சம்பவங்களும் ஒரே நேரத்திலேயே நடைபெறும் என்று போதித்தாலும்,[11] இவற்றிற்கிடையில் அந்திகிறிஸ்துவின் ஏழு வருஷ ஆட்சி இருக்கும் என்றே வேதாகமம் கூறுகிறது. மேலும், மூன்றாம் வசனத்தில் ‘‘விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது’’ என்பதில் ‘‘அந்த நாள்’’ என்பது இயேசுகிறிஸ்துவின் பகிரங்க வருகையைப்பற்றிய குறிப்பாகும். ஏனெனில், அந்திகிறிஸ்து வெளிப்பட்ட பின்பே இயேசுகிறிஸ்துவின் பகிரங்க வருகை நடைபெறும், மேலும், அந்திகிறிஸ்து எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதை நான்காம் வசனத்தில் விளக்கும் பவுல்,[12] ஆறாம் வசனத்தில், ‘‘அவன் தன் காலத்திலே வெளிப்படும் படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே’’ என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, அந்திகிறிஸ்து வெளிப்படுவதை ஏதோவொன்று தடைசெய்கிறது என்பது தெளிவாகின்றது.

அந்திகிறிஸ்து வெளிப்படுவதைத் தடைசெய்வது யார் என்பது கிறிஸ்தவ உலகில் அதிக சர்ச்சைக்குரிய விஷயமாய் உள்ளது. ஏனெனில், ‘‘அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது. ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்’’ (2தெச.2:7-8) என்று பவுல் குறிப்பிட்டுள்ளார். எனினும், ‘‘அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது’’ என்று பவுல் கூறுவதினால், அந்திகிறிஸ்து இப்பொழுதே இருக்கின்றான் என்று கூறமுடியாது. ஏனெனில், பவுல் இதை முதலாம் நூற்றாண்டிலேயே எழுதியுள்ளார். எனவே, அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது என்பதினால் அந்திகிறிஸ்து இப்பொழுதே செயற்படுகிறான் என்றால், அவன் முதல் நூற்றாண்டிலேயே இருந்திருக்க வேண்டும். ஆனால்,

---

[8] அந்திகிறிஸ்துவின் ஆட்சி இவ்வுலகில் ஏழு வருஷங்களுக்கு இருக்கும் என்னும் சத்தியம் தானியேல் 9:27இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வதிகாரத்தில் வருஷங்களைக் கொண்ட எழுபது வாரங்களைப்பற்றிய தரிசனம் உள்ளது. இதில் ஒரு வாரம் ஏழு வருஷங்களைக் குறிக்கின்றது. இதைப்பற்றிய ஆதாரபூர்வமான முழுமையான விளக்கத்திற்கு எனது ‘‘இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை’’ என்னும் நூலைப் பார்க்கவும்.

[9] வேதாகம சத்தியத்தின்படி, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும். அதாவது, முதல் கட்டத்தில் உலகிலிருக்கும் தம்முடைய சபை மக்களை எடுத்துக்கொள்வதற்காக இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து வானத்திற்கு வருவார். அச்சமயம், இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் சரீரப்பிரகாரமாக உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1தெச.4:16-17). ஆனால், அதன் பின்னர் ஏழு வருஷங்களுக்கு உலகிலிருக்கும் அந்திகிறிஸ்துவின் உலகளாவிய ஆட்சியின் முடிவில், தம்மோடு இருக்கும் சபை மக்களுடன் பகிரங்கமாக இவ்வுலகத்திற்கு வரும் இயேசுகிறிஸ்து (யூதா.1:14-15), அந்திகிறிஸ்துவின் ராட்சியத்தை முழுமையாக அழித்துவிட்டு, தம்முடைய ஆயிர வருஷ ஆட்சியை ஆரம்பிப்பார் (வெளி.11:15). இவற்றில் முதலாவது, ‘‘இரகசிய வருகை’’ என்றும், மற்றது ‘‘பகிரங்க வருகை’’ என்றும் தமிழ் கிறிஸ்தவர்களினால் பெயரிடப்பட்டுள்ளது. (இதைப்பற்றிய முழுமையான விளக்கத்திற்கு எனது ‘‘இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை’’ என்னும் நூலைப் பார்க்கவும்). மேலும், இரகசிய வருகை எவரும் எதிர்பாராத நேரத்தில் திருடன் வருவதைப் போல இருக்கும் என்றும் (லூக்.12:39-40), பகிரங்க வருகை எல்லாருக்கும் தெரியும் விதத்தில் இருக்கும் என்றும் (வெளி.1:7) வேதாகமம் கூறுகிறது. ஏனெனில், இரகசிய வருகையின்போது அவர் வானத்திற்கே வருவார் (1தெச.4:17). ஆனால் பகிரங்க வருகையின்போது அவர் பூமிக்கு வருவார் (சக.14:4).

[10] J.F.Walvoord & R.B.Zuck, *The Bible Knowledge Commentary – New Testament*, p. 717. சில கிறிஸ்தவர்கள் இவ்விரு வாக்கியங்களும் ஒரே சம்பவத்தை, அதாவது சபை எடுத்துக்கொள்ளப்படுவதை மாத்திரமே குறிப்பதாகக் கருதுகின்றனர் (W.W.Wiersbe, *An Expository Commentary on Thessalonians*, p. 138; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2053).

[11] A,Reese, *The Approaching Advent of Christ*, p. 18; W.C.Thomas, *The Blessed Hope*, pp. 5-6.

[12] 2தெசலோனிக்கேயர் 2:4இல், ‘‘அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனெனப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பவுலின் காலத்தில் அந்திகிறிஸ்து இருந்ததிற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. எனினும், அந்திகிறிஸ்து சாத்தானின் வல்லமையினால் செயல்படுகிறவனாகவே இருப்பான் (வெளி.13:2)[13] என்பதினாலேயே பவுல் இவ்வாறு எழுதியுள்ளார். அதாவது, உலகின் முடிவில் அந்திகிறிஸ்துவை செயல்படவைக்கும் சாத்தான் இப்பொழுதும் உலகத்தில் இருப்பதினால், சாத்தானுடைய அக்கிரமச் செயல்கள் இப்பொழுதும் உலகத்தில் உள்ளன. ஆனாலும், சாத்தான் எப்படி செயல்படுகின்றான் என்பதை நம்மால் அறியமுடியாமல் இருப்பதினால், இதை இரகசியம் என்று பவுல் குறிப்பிட்டுள்ளார். எனினும், சாத்தான் இப்பொழுது கிரியை செய்தாலும் அவனால் கொண்டுவரப்படும் அந்திகிறிஸ்து இன்னும் வெளிப்படவில்லை. ஏனெனில், தற்காலத்தில் பரிசுத்தாவியானவரின் வல்லமையுடன் செயல்படும் சபை அந்திகிறிஸ்து வெளிப்படுவதைத் தடை செய்வதினால், சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் வரை அந்திகிறிஸ்து வெளிப்பட மாட்டான் என்பதையும் பவுல் அறியத்தந்துள்ளார்.

தேவனால் மாத்திரமே அந்திகிறிஸ்து வெளிப்படுவதைத் தடைசெய்ய முடியும் என்பது உண்மை என்றாலும்,[14] தற்காலத்தில் தேவனுடைய செயல்கள் அனைத்தும் பரிசுத்தாவியானவரால் சபையின் மூலமாகவே செய்யப்படுகின்றன. இதனால், தற்காலத்தில் சபையில் செயல்படும் பரிசுத்தாவியானவரே அந்திகிறிஸ்து வெளிப்படுவதைத் தடைசெய்கிறவராக இருக்கின்றார்.[15] மேலும், தேவனைப் போலவே பரிசுத்தாவியானவரும் நித்தியமானவராக இருக்கின்ற போதிலும், பெந்தெகொஸ்தே நாளில் சபை உருவானபோது, விசுவாசிகளின் உள்ளத்தில் நிரந்தரமாக வாசஞ் செய்யும் விதத்தில் சபைக்கு அருளப்பட்டார்.[16] இதனால், சபை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்போது, தற்காலத்தில் சபையின் மூலமாக நடைபெறும் அவருடைய செயற்பாடுகளும் இல்லாமற்போய்விடும்.[17] எனவே, தற்காலத்தில் "பரிசுத்தாவியானவரின் வல்லமையுடன் இயங்கும் சபை சாத்தானுக்கு எதிராகச் செயற்படுவதினால், சபை உலகத்தில் இருக்கும்வரை சாத்தானால் அந்திகிறிஸ்துவின் ஆட்சியைக் கொண்டுவர முடியாது."[18] இதனால்தான், தாம் கட்டும் சபையைப் பாதாளத்தின் வாசல்களினால் மேற்கொள்ள முடியாது (மத்.16:18) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள பாதாளத்தின் வாசல்" என்பது யூதர்களின் மொழிவழக்கில் "மரணத்தைக் குறிப்பிடும் உருவகமாகும்.[19] ஏனெனில், இது கல்லறை என்னும் அர்த்தமுடைய ஷியொல் என்னும் எபிரெயச் சொல்லை அக்கால யூதர்கள் குறிப்பிடும் முறையாக இருந்தது.[20] ஏசாயா 38:10இல் இத்தகைய அர்த்தத்துடன் பாதாளத்தின் வாசல் என்னும் சொல் உள்ளது.[21] இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட யூதர்களின் நூல்களிலும் இத்தகைய சொற்பிரயோகம் உள்ளது.[22] மேலும், யோபு 38:17, சங்கீதம் 9:13, 107:18 என்னும் வசனங்களில் நேரடியாகவே

[13] வெளிப்படுத்தல் 13:1-2இல் மிருகமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் அந்திகிறிஸ்துவைப்பற்றி எழுதும் யோவான், இரண்டாம் வசனத்தின் இறுதியில் "வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது"என்று குறிப்பிட்டுள்ளார். வெளிப்படுத்தல் புத்தக தரிசனத்தில் வலுசர்ப்பம் சாத்தானையே அடையாளப்படுத்துவதினால் (வெளி.12:9) வலுசர்ப்பம் அந்திகிறிஸ்துவுக்கு கொடுக்கும் வல்லமை, சாத்தானுடைய வல்லமையாகவே இருக்கும்.

[14] D.E.Hiebert, *1,2Thessalonians: Expositional Commentary*, p. 337.

[15] J.F.Walvoord & R.B.Zuck, *The Bible Knowledge Commentary – New Testament*, p. 719; J.D.Pentecost, *Things to Come*, p. 205; M.Rydelnik & M.Vanlaningham, ed., *The Moody Bible Commentary*, p. 1893; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2054.

[16] பெந்தெகொஸ்தே நாளில் சபையாகக் கூடியிருந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அருளப்பட்ட பரிசுத்த ஆவியானவர் (அப்.2:1-4), "என்றென்றைக்கும் அவர்களுடனேகூட இருப்பவராகவும்" (யோவா.14:16), "ஜீவத்தண்ணீருள்ள நதிகளாக" (யோவா.7:38-39), "நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருப்பார்" (யோவா.4:14) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இதனால்தான், "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது" என்று யோவான் குறிப்பிட்டுள்ளார்.

[17] சபை எடுத்துக்கொள்ளப்படும்போது, சபையின் மூலமாக நடைபெறும் பரிசுத்த ஆவியானவருடைய செயற்பாடுகளும் இல்லாமற்போய்விடும் என்பதினால், அதன்பின்னர் ஆவியானவரும் இல்லாமல் போய்விடுவார் என்று எண்ணலாகாது. சபையில் அவர் செய்யும் பணிகள் மாத்திரமே இல்லாமல்போகும்.

[18] W.W.Wiersbe, *An Expository Commentary on Thessalonians*, pp. 138-139.

[19] L.A.Barbieri, *Matthew: The Bible Knowledge Commentary – New Testament*, p. 57; R.T.France, *Matthew: Tyndale New Testament Commentaries*, p. 255.

[20] D.L.Turner, *Matthew: Baker Exegetical Commentary on the NT*, p. 405.

[21] ஏசாயா 38:10இல், "நான் என் பூரண ஆயுசின் வருஷங்களுக்குச் சேராமல் பாதாளத்தின் வாசல்களுக்குட்படுவேன் என்று என் நாட்கள் அறுப்புண்கிறபோது சொன்னேன்" என்று எசேக்கியா கூறினான்.

[22] Wisdom of Solomon 16:13; 3Maccabees 5:51; Psalms of Solomon 16:2.

மரணவாசல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, "தாம் கட்டும் சபைக்கு மரணம் இல்லை, அதாவது, அதற்கு அழிவோ அல்லது முடிவோ இல்லை என்றே இயேசுகிறிஸ்து மத்தேயு 16:18இல் குறிப்பிட்டுள்ளார்."[23] இதனால், சபையில் இருப்பவர்கள் மரிக்கமாட்டார்கள் என்பது இதன் அர்த்தம் அல்ல. ஆனால், சபையில் இருப்பவர்கள் மரித்தாலும் சபை இல்லாமல் போகாது. ஏனெனில், "சபையை யாராலும் அழிக்க முடியாது."[24] "சபையை அழிக்கக்கூடிய வல்லமை எதற்கும் இல்லை."[25] "எந்தத் தீய சக்தியினாலும் அதை மேற்கொள்ள முடியாது."[26] ஏனெனில், "சாத்தானின் சகலவிதமான தாக்குதல்களையும் மேற்கொண்டு சபை அழியாமல் இருக்கும் என்றே இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்."[27] உண்மையில், "சபைக்கு முடிவென்பதே இல்லை."[28] இதனால், சபை உலகத்தில் இருக்கும்வரை அந்திகிறிஸ்துவினால் உலகத்திற்கு வர முடியாது. ஏனெனில், அந்திகிறிஸ்துவின் வருகையைத் தடுக்கும் வல்லமை சபைக்கு இருக்கின்றது.

அந்திகிறிஸ்துவின் வருகையைத் தடுக்கும் வல்லமை பரிசுத்தாவியானவரினால் செயல்படும் சபைக்கு இருப்பதினால், சபை உலகிலிருக்கும் தற்காலத்தில் அந்திகிறிஸ்து வந்துவிட்டான் என்றும், கொரோனா தடுப்பு ஊசிகளின் மூலம் அவனுடைய முத்திரை போடப்படுகிறது என்றும் அச்சமடைவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. மேலும், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமான உபத்திரவக் காலத்திற்குள் சபை செல்லாது என்று இயேசுகிறிஸ்துவும் வெளிப்படுத்தல் 3:10இல் வாக்களித்துள்ளார். இதனால்தான், "என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" (வெளி.3:10) என்னும் வாக்குத்தத்தம் சபை மக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உபத்திரவம், "பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைக் காலமாக" இருப்பதினால், இது தனியொரு சபைக்கு மாத்திரமல்ல, அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் முழு உலகிலும் ஏற்படும் உபத்திரவமாகவே உள்ளது.[29] இதனால்தான், இயேசுகிறிஸ்து இதைப்பற்றி கூறும்போது, "உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" (மத்.24:21) என்றும், "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்" (மத்.24:22) என்றும் தெரிவித்துள்ளார். இதனால்தான், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில் உலகெங்கும் ஏற்படும் கொடிய உபத்திரவம் மூன்றரை வருஷங்களுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இது, அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சியின் இறுதி மூன்றரை வருஷ காலமாகும். எனினும், இது இஸ்ரவேல் மக்கள் மனந்திரும்புவதற்காகத் தேவன் அனுமதிக்கும் உபத்திரவமாகவே உலகத்தின் இறுதியில் ஏற்படும்.[30] அப்பொழுது, இயேசுகிறிஸ்து மத்தேயு 24ஆம் அதிகாரத்திலும், வெளிப்படுத்தல் புத்தகத்திலும் முன்னறிவித்துள்ள கொடிய உபத்திரவங்கள் உலகத்தில் ஏற்படும். இவைகள், உலகத்தின் முடிவு காலத்தில் நடைபெறும்

---

[23] D.A.Carson, *Matthew: The Expositor's Bible Commentary Volume 8*, p. 370.

[24] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 1267.

[25] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 425.

[26] D.L.Turner, *Matthew: Baker Exegetical Commentary on the NT*, p. 405.

[27] C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, pp. 253-254.

[28] D.A.Hagner, *Matthew: Word Biblical Commentary Volume 33*, p. 472.

[29] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*, p. 198; R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 285.

[30] வேதாகம சத்தியத்தின்படி, தேவன் இஸ்ரவேல் மக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வைத்திருக்கும் திட்டங்கள் வித்தியாசமானவை. இதனால்தான், பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யத்தை மையமாகக் கொண்டு செயல்பட்ட தேவன், புதிய ஏற்பாட்டில் சபையை மையமாகக் கொண்டு செயல்படுகின்றார். மேலும், சபை இயேசுகிறிஸ்துவின் சரீரமாகவும், அவருடைய மணவாட்டியாகவும் இருப்பதினால், அந்திகிறிஸ்து வருவதற்கும் முன்பே இவ்வுலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும். ஆனால், அந்திகிறிஸ்துவின் காலத்தில் ஏற்படும் உபத்திரவங்களே இஸ்ரவேல் மக்கள் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும். இதைப்பற்றிய முழுமையான விளக்கத்திற்கு விரையில் வெளிவரும் எனது "இஸ்ரவேல் ராஜ்யமும் இயேசுவின் பக்தர்களும்" என்னும் நூலைப் பார்க்கவும்.

என்பதையும், (தானி.12:1).[31] அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலம் ஏழு வருஷங்களுக்கு நீடிக்கும் என்பதையும் தானியேலின் தரிசனங்கள் அறியத்தருகின்றன.[32] ஆனால், இத்தகைய கொடிய காலத்திற்குள் சபை செல்லாது என்றே வெளிப்படுத்தல் 3:10இல் இயேசுகிறிஸ்து வாக்களித்துள்ளார்.

வெளிப்படுத்தல் 3:10இல் "சோதனைக் காலத்திற்குத் தப்பும்படி" என்பது மூலமொழியின் இலக்கணத்தின்படி, "அக்காலத்திற்கு உட்படாதபடி தப்புவிக்கப்படுவதையே குறிக்கின்றது.[33] இதனால்தான், "சோதனைக் காலத்திற்குத் தப்பும்படி" என்பது மூலமொழியில் "சோதனைக் காலத்திற்கு உட்படாதபடி அதிலிருந்து வெளியேற்றப்படும்" என்று அர்த்தந்தரும் விதத்தில் உள்ளது.[34] மேலும், இது "பூமியில் குடியிருக்கிறவர்கள்" மீது வரவிருக்கும் உபத்திரவமே தவிர, சபைக்கு வரும் துயரம் அல்ல.[35] ஏனெனில், வெளிப்படுத்தல் புத்தகத்தில் "பூமியில் குடியிருக்கிறவர்கள்" என்னும் சொற்பிரயோகம், கிறிஸ்தவ சபையை அல்ல, தேவனை அறியாத அவிசுவாசிகளையே குறிக்கின்றது (வெளி.6:10, 8:13, 11:10, 12:12, 13:8, 13:12, 13:14, 17:1, 17:8).[36] எனவே, அவிசுவாசிகளின்மீது தேவனுடைய கோபாக்கினை வெளிப்படும் உபத்திரவ காலத்திற்கு உட்படாதபடி சபை தப்புவிக்கப்படுவதினால், அக்காலம் ஆரம்பமாவதற்கும் முன்பே சபை மக்கள் உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவார்கள். மேலும், "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" (யோவா.16:33) என்று இயேசுகிறிஸ்து கூறியதினால், சபை உபத்திரவ காலத்திலும் உலகத்தில் இருக்கும் என்று வாதிடுவது அர்த்தமற்றது. ஏனெனில், இவ்வசனத்தில் உபத்திரவம் எதிர்காலத்தில் நடைபெறும் சம்பவமாகக் குறிப்பிடப்படவில்லை.[37] இதைப்போலவே, நிகழ்காலத்தில் கிறிஸ்தவர்கள் எதிர்நோக்கும் உபத்திரவத்தைக் குறிப்பிடவே வேதாகமத்தில் இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது (மாற்.4:17, ரோ.5:3, 2கொரி.1:4). எனவே, இதை உபத்திரவ காலத்தைப்பற்றிய அறிவிப்பாக எடுத்தால், இரண்டாயிரம் வருஷங்களாக சபை உபத்திரவ காலத்தில் இருப்பதாகவே கூறவேண்டும். ஏனெனில், ஆரம்ப காலத்திலிருந்தே சபை பல்வேறுவிதமான உபத்திரவங்களைச் சந்தித்து வந்துள்ளது. ஆனால், வேதாகமத் தீர்க்கதரிசனங்களில் "உலக முடிவில் தீமையின் மீதான தேவனுடைய கோபாக்கினை வெளிப்படும் காலமே" உபத்திரவகாலமாக உள்ளது. மேலும், உலகின் இறுதியில் தேவனை அறியாதவர்கள் எதிர்நோக்கும் இந்த கோபாக்கினைக்கு கிறிஸ்தவர்கள் உட்படுவதில்லை என்பதே வேதாகமம் நமக்கு அறியத்தரும் நற்செய்தியாகும் (யோவா.3:36, ரோ.8:1, 1தெச. 1:10).[38] கிறிஸ்தவ சபை ஆரம்பத்திலிருந்தே பலவிதமான உபத்திரவங்களைச் சந்தித்துள்ள போதிலும், இவற்றை சபையின் மீதான தேவகோபாக்கினை என்று கூறமுடியாது. ஏனெனில், கிறிஸ்தவ சபைக்கு வரும் உபத்திரவங்கள் சாத்தானால் கொண்டுவரப்படுபவை. ஆனால் உபத்திரவ காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்களில் (வெளி.6-18) முன்னறிவிக்கப்பட்டுள்ள உபத்திரவங்கள் சாத்தானால் கொண்டுவரப்படுபவைகள் அல்ல. இவை தேவனுடைய கோபாக்கினைக்கு உலகம் உட்படுவதைப்பற்றிய முன்னறிவிப்புகளாகும்.

இயேசுகிறிஸ்துவின் வருகை தேவகோபாக்கினையிலிருந்து சபையை விடுவிக்கும் என்பதை 1தெசலோனிக்கேயர் 1:10 அறியத்தருவதினால், தேவகோபாக்கினையாக உபத்திரவங்கள் வருவதற்கு முன்னர் சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பது தெளிவாகின்றது. இவ்வசனத்தில் "விடுவித்தல்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ருஹூஓமாய்"

---

31 தானியேல் 12:1இல், "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும்" என்று தானியேலுக்குச் சொல்லப்பட்டுள்ளது.

32 தானியேல் 9ஆம் அதிகாரத்திலுள்ள 70 வாரகாலத் தரிசனத்தில் இதைப்பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதைப்பற்றிய முழுமையான விளக்கத்திற்கு எனது "இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை" என்னும் நூலைப் பார்க்கவும்.

33 J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, p. 87.

34 L.J.Wood, *The Bible and Future Events*, p. 77.

35 J.D.Pentecost, *Things to Come: A Study in Biblical Eschatology*, p. 197.

36 A.F.Johnson, *Revelation: Bible Study Commentary*, p. 60.

37 P.N.Benware, *Understanding End Times Prophecy*, p. 198.

38 "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" (ரோ.8:1) என்பதினால், அவர்கள், இனிவரும் கோபாக்கினையினின்று தங்களை நீங்க லாக்கி இரட்சிக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் (1தெச.1:10).

(*rhuomai*) என்னும் கிரேக்கச் சொல் ''வல்லமையான செயலினால் ஆபத்திலிருந்து தப்புவிக்கப்படுதல்'' என்னும் அர்த்தம் உடையது.[39] இதனால், ''தேவ கோபாக்கினை வரும் இடத்தில் இருந்து சபை அகற்றப்படுவதைப்பற்றியே இவ்வசனம் கூறுகிறது.''[40] எனவே, இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பது தெளிவாகின்றது. உண்மையில், ''இயேசுகிறிஸ்துவினால் மீட்கப்பட்டு, நீதிமான்களாக இருக்கும் கிறிஸ்தவர்கள் தேவகோபாக்கினைக்கு உட்படுவார்கள் என்று கூறுவது அர்த்தமற்ற ஒரு தர்க்கமாகவே உள்ளது.''[41] அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமான உபத்திரவ காலத்தில் தேவனுடைய கோபாக்கினை உலகத்தின் மீது வருவதற்கு முன்பே உலகத்திலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படும் என்பதினால்தான், ''தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்திருக்கிறார்'' என்று 1தெசலோனிக்கேயர் 5ம் அதிகாரத்தில் பவுல் தெரிவித்துள்ளார் (1தெச.5:9). மேலும், உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படுவதைப்பற்றிய அறிவிப்பைத் தொடர்ந்து வரும் இவ்வதிகாரம், உபத்திரவ காலத்தில் தேவனுடைய கோபாக்கினைக்கு உட்படுபவர்களையும், இதில் அகப்படாதபடி உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுபவர்களையும் வேறுபடுத்திக் காண்பிக்கும் விதத்தில் ஆரம்பமாகின்றது. அதாவது, இயேசுகிறிஸ்துவின் வருகை சடுதியாய் எவரும் எதிர்பாராத நேரத்தில் சம்பவிக்கும் என்பதினால், ''இரவிலே திருடன் வருகிறவிதமாய் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்'' என்று கூறும் பவுல், ''சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடுதியாய் அவர்கள்மேல் வரும். அவர்கள் தப்பிப்போவதில்லை'' (1தெச.5:2-3) என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவ்வழிவு கிறிஸ்தவர்களுக்கு ஏற்படாது என்பதினால், ''சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்கள் அல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள். நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே'' (1தெச.5:4-5) என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது, கிறிஸ்தவர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருப்பதினால், அந்தகாரத்திலிருக்கும் அவிசுவாசிகளின்மீது வரும் தேவனுடைய கோபாக்கினைக்கு அவர்கள் உட்படமாட்டார்கள் என்பதை இவ்வசனங்களில் பவுல் தெளிவுபடுத்தியுள்ளார்.[42] ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலி பாவத்தின்மீதான தேவதண்டனையிலிருந்து மனிதரை விடுவித்துள்ளதினால், ''பாவம் போக்கும் அவருடைய சிலுவைப் பலியினால் மீட்கப்பட்ட சபை மக்கள், பாவத்தின் தண்டனையாக உலகத்தின் இறுதிகாலத்தில் வரும் உபத்திரவங்களுக்கு உட்பட மாட்டார்கள்.''[43]

அந்திகிறிஸ்துவின் ஆட்சி ஆரம்பமாவதற்கு முன்பே சபை எடுத்துக்கொள்ளப்படும் என்பதற்கு ஆதாரமாக 1தெசலோனிக்கேயர் 4:17 மட்டுமே உள்ளது என்னும் சிலரது போதனை தவறாகும். ஏனெனில், உலகின் முடிவு காலத்தில் நடைபெறும் சம்பவங்களை முழுமையாக முன்னறிவிக்கும் வெளிப்படுத்தல் புத்தகத்தில், அந்திகிறிஸ்துவின் ஆட்சி ஆரம்பமாவதற்கும் முன்பே சபை எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோகத்தில் இருப்பதை நாம் காணலாம். இதனால்தான், வெளிப்படுத்தல் 4:1ல், ''இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை நான் உனக்குக் காண்பிப்பேன்'' என்று புத்தக ஆசிரியரான யோவானுக்குச் சொல்லப்பட்டது. இவ்வசனத்தில், ''இவைகளுக்குப் பின்பு'' என்னும் சொற்பிரயோகம் ''சபைகளுக்குப் பின்பு'' அல்லது ''சபை காலத்திற்குப் பின்பு'' என்னும் அர்த்தத்திலேயே மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ளது.[44] எனவே, இவ்வசனத்தில் ''இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்'' என்பது ''சபைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்'' ஆகும். அதாவது, சபை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் சம்பவிப்பவைகளாகும். ஏனெனில், இதற்கு முன் உள்ள அதிகாரங்களில் சபைகளைப் பற்றிய தரிசனமே யோவானுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், நான்காம் அதிகாரத்திற்குப்

39 W.Arndt & F.W.Gingrich, *A Greek-English Lexicon of the NT*, p. 233.
40 R.Showers, *Maranatha: Our Lord Come!* p. 194.
41 J.F.Walvoord, *Rapture Question*, p. 22.
42 S.N.Gundry, ed., *Three Views on The Rapture*, p. 31.
43 L.J.Wood, *Is the Rapture Next?*, p. 20.
44 W.R.Newell, *The Book of Revelation*, p. 90

பின்னர் வெளிப்படுத்தல் புத்தகத்தில் சபையைப்பற்றி நாம் வாசிப்பதில்லை. இதனால்தான், முதல் மூன்று அதிகாரங்களிலும் பல தடவைகள் இடம்பெறும் “சபை” என்னும் சொல் 4ஆம் அதிகாரத்திற்குப் பின்னர் இடம்பெறவில்லை. புத்தகத்தின் முடிவுரையிலேயே மறுபடியும் இச்சொல் உள்ளது (வெளி.22:16). இதற்குக் காரணம், 4ஆம் அதிகாரத்திற்குப் பின்னர் முன்னறிவிக்கப்பட்டுள்ள சம்பவங்கள் நடைபெறும்போது சபை உலகத்தில் இருப்பதில்லை.[45] மேலும், வெளிப்படுத்தல் புத்தகத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் காண்பிக்கும் முதலாம் அதிகாரம் 19ஆம் வசனத்தில் “நீ கண்டவைகள்” என்னும் குறிப்பு முதலாம் அதிகாரத்தில் யோவான் கண்ட தரிசனத்தையும், “இருக்கிறவைகள்” என்பது, 2ஆம் 3ஆம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உலகில் இருக்கும் சபைகளைப்பற்றிய குறிப்பாகவும், “இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்” என்னும் சொற்பிரயோகம் சபைகளுக்குப் பின்பு நடப்பவைகளை, அதாவது உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு சம்பவிப்பவைகளையும் குறிக்கின்றது.[46] உண்மையில், வெளிப்படுத்தல் புத்தகத்தை வியாக்கியானம் செய்வதற்குத் தேவனால் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பாகவே இவ்வசனம் உள்ளது.[47] இதன்படி, 4ஆம் அதிகாரத்திற்குப் பின்னர் சபை உலகத்தில் இருப்பதில்லை என்பதை அறிந்து கொள்கின்றோம்.

அந்திகிறிஸ்துவின் ஆட்சி ஆரம்பிக்கப்படுவதற்கும் முன்பே உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் சபை பரலோகத்தில் இருப்பதை வெளிப்படுத்தல் நான்காம் அதிகாரம் அறியத்தருகின்றது. அதாவது, வெளிப்படுத்தல் 4ஆம் 5ஆம் அதிகாரங்களில் யோவானுக்குக் காண்பிக்கப்படும் பரலோகத் தரிசனத்தில், தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட சபை இருப்பதை யோவான் கண்டதைப்பற்றி வெளிப்படுத்தல் 4ஆம் அதிகாரம் 2 முதல் 4 வரையிலான வசனங்களில் நாம் வாசிக்கலாம். மேலும், இத்தரிசனத்தில், உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபையானது 4ஆம் வசனத்தில் “இருபத்து நான்கு மூப்பர்களாக” சித்தரிக்கப்பட்டுள்ளது. இதனால்தான், “அந்த சிங்காசனத்தைச் சூழ இருபத்து நான்கு சிங்காசனங்களிருந்தன. இருபத்து நான்கு மூப்பர்கள் வெண் வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன்” என்று 4ம் வசனத்தில் யோவான் குறிப்பிட்டுள்ளார். இவ்வசனத்தில் மூப்பர்களாக சித்தரிக்கப்பட்டுள்ளவர்கள் யார் என்பது பற்றி வித்தியாசமான கருத்துகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ள போதிலும், இவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தல் 5:9-10இல் இவர்கள் பாடும் பாடல் நமக்கு அறியத்தருகிறது.[48] இப்பாடலைப் பாடுபவர்கள் பரலோகத்திலிருக்கும் உயர்மட்ட தேவதூதர்கள் என்று சிலர் கருதுகின்றபோதிலும்,[49] தேவதூதர்களினால் இப்பாடலைப் பாடமுடியாது.[50] ஏனெனில், இப்பாடலைப் பாடுகிறவர்கள், தாங்கள்

---

45 J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, p. 103.

46 R.L.Thomas, “John’s Apocalyptic Outline” in *Bibliotheca Sacra*. 137 (1980), pp. 338-339; R.L.Thomas, *Revelation: An Exegetical Commentary*, pp. 115-116; J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, p. 48.

47 W.A.Criswell, *Expository Sermons on Revelation*, p. 177.

48 வெளிப்படுத்தல் 5:9-10இல் “தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர். ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர். நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.”

49 R.H.Mounce, *Revelation: The New International Commentary on the New Testament*, p. 135; G.R.Osborne, *Revelation:* Baker Exegetical Commentary on the New Testament, p. 229; R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 348; F.F.Bruce, ed., *New International Bible Commentary*, p. 1605.

50 வேதாகமத்தின் பழைய கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் இப்பாடல் தேவதூதர்களின் பாடலாக இருப்பதுபோல மாற்றப்பட்டுள்ளது. அதாவது, இப்பாடலில் 9ம் வசனத்தில் “எங்களை” என்னும் சொல் “மக்களை” என்று மாற்றப்பட்டுள்ளது. இதன்படி “எங்களை மீட்டுக்கொண்டீர்” என்பது “மக்களை மீட்டுக்கொண்டீர்” என்று உள்ளது. இதேபோல 10ம் வசனத்தில் “எங்களை” என்பது “அவர்களை” என்று மாற்றப்பட்டுள்ளது. இதன்படி, “எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்” என்பது “அவர்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்” என்று உள்ளது. இதேபோல, “நாங்கள் பூமியில் அரசாளுவோம்” என்பதும் “அவர்கள் பூமியில் அரசாளுவார்கள்” என்று உள்ளது. இயேசுகிறிஸ்து மனிதரை மீட்டுக்கொண்டதற்காகத் தேவதூதர்கள் அவரை மகிமைப்படுத்தும் விதத்தில் மாற்றப்பட்டுள்ள இப்பாடலே சரியானது என்னும் எண்ணத்தில், தற்காலத்தில் வெளிவரும் புதிய வேதாகமங்கள் இப்பாடலை மொழிபெயர்த்துள்ளன. ஆனால், நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமமும் ஆங்கிலத்தில் KJV மொழிபெயர்ப்புமே இப்பாடலைச் சரியான விதத்தில் குறிப்பிட்டுள்ளன. தற்காலத்தில் இருக்கும் நூற்றுக்கணக்கான வேதாகமத்தின் கையெழுத்துப் பிரதிகளில், சில பிரதிகளில் மாத்திரம் உள்ளதே சரியானது என்று வாதிடுவது அர்த்தமற்றது. பெரும்பாலான கையெழுத்துப் பிரதிகளில் உள்ளவிதமாக இப்பாடல், மீட்கப்பட்ட மனிதரின் பாடலாகவே உள்ளது.

இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியினால் மீட்கப்பட்டு ராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருப்பதாக இப்பாடலில் குறிப்பிட்டுள்ளனர் (வெளி.5:10). இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலி மனிதர்களுடைய பாவத்திற்கான பரிகாரமாகவே செலுத்தப்பட்டதினால் தூதர்களுக்கு இதில் எவ்வித நன்மையும் இல்லை. ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் மூலமாக மனிதருக்கு அருளப்படும் இரட்சிப்பைப்பற்றி அறிந்துகொள்ள பரலோகத்திலிருக்கும் தூதர்கள் ஆசைப்பட்டார்கள் என்பதையும் (1பேது.1:12), விழுந்துபோன தூதர்கள் தண்டனைக்காக அடைத்து வைக்கப்பட்டி ருக்கிறார்கள் (யூதா.6) என்பதையும் வேதாகமம் அறியத்தருகின்றதே தவிர, இவர்கள் இயேசு கிறிஸ்துவினால் மீட்கப்படுவார்கள் என்று கூறவில்லை. எனவே, தாங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, ராஜாக்களும் ஆசாரியர்களுமாய் இருப்பதாக இவர்களினால் பாடமுடியாது. உண்மையில், கிறிஸ்தவர்களே இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியினால் மீட்கப்பட்டு ராஜாக்களும் ஆசாரியர்களுமாய் இருக்கின்றனர் (வெளி.1:6, 1பேது.2:5,9).[51] எனவே, இவர்களே உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோகத்தில் தேவனை மகிமைப்படுத்தும் இருபத்து நான்கு மூப்பர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.[52]

வெளிப்படுத்தல் புத்தக தரிசனங்களில் பரலோகத்தில் இருக்கும் இருபத்து நான்கு மூப்பர்களும் அந்திகிறிஸ்துவின் ஆட்சி அரம்பமாவதற்கும் முன்பே உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபையைப் பிரதிநிதித்துவம் வகிப்பவர்களாக இருக்கின்றனர். இதனால்தான், இவர்கள் பரலோகத்தில் இருப்பதை அறியத்தரும் 4ஆம் 5ஆம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் தரிசனத்தின் பின்பு, 6ம் அதிகாரத்திலேயே அந்திகிறிஸ்து உலகை ஆளுகை செய்ய வருவதைப்பற்றிய தரிசனம் யோவானுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, உலகின் இறுதியில் முழு உலகையும் தன்னுடைய ஆளுகையின் கீழ் வைத்திருக்கும் அந்திகிறிஸ்து என்பவன் வருவதற்கு முன்பே உலகத்திலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படும். இதனால், இதை அறியாத நிலையில், வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் தற்காலத்தில் நிறைவேறுகிறது என்னும் தவறான போதனைகளினால் கலக்கமடைந்தவர்கள், கொரோனா தடுப்பு ஊசிகளையும் அந்திகிறிஸ்துவின் ஊசிகளாகக் கருதுகின்றனர். ஆனால், வேதாகம சத்தியத்தின்படி உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பே அந்திகிறிஸ்து வருவான். இதனால், கொரோனா தடுப்பு ஊசிகளுக்கும் அவனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது அந்திகிறிஸ்துவின் அடையாளம் அல்ல.

உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பே அந்திகிறிஸ்துவின் ஆட்சி ஆரம்பமாகும் என்றாலும், தற்போது போடப்படும் சிலவகையான கொரோனா தடுப்பு ஊசிகளில் ‘‘லூஸி∴பெரின்’’ (Luciferin) என்னும் பெயருள்ள ஒரு இரசாயனம் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இதனால் இது சாத்தானோடு தொடர்புடையது என்றும் எண்ணி பல கிறிஸ்தவர்கள் கலக்கமடைந்துள்ளனர்.[53] ஆனால், இந்த இராசயனத்திற்கும் சாத்தானுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஏனெனில், லூஸி∴பெரின் என்பது பிரகாசித்தல் அல்லது ஒளிர்தல் என்னும் அர்த்தமுள்ள லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து வந்துள்ளது. இதனல்தான், மின்மினிப் பூச்சிகளின் அடிவயிற்றுப் பகுதியில் பிரகாசிக்கும் ஒருவகையான இரசாயனத்தைக் குறிப்பிடுவ தற்கும் இச்சொல் உபயோகிக்கப்படுகின்றது.[54] மேலும், சில வகையான மருந்துகளின் செயல்பாட்டைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு ‘‘லூஸி∴பெரேஸ்’’ என்னும் பெயருள்ள பிரகாசிக்கின்ற நொதியம், அதாவது, ‘‘உயிருள்ள ஜீவியில் எற்படும் இரசாயன மாற்றத்தை அதிகரிக்கச் செய்யும் புரோதம்’’ (enzyme) பயன்படுத்தப்படுகின்றது. இதனால், சிலவகையான கொரோனா தடுப்பு மருந்துகளின் செயல்பாட்டைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் ‘‘லூஸி∴பெரேஸ்’’ என்னும்

[51] ‘‘நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக’’ (வெளி.1:6) என்றும், ‘‘ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்... நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்’’ (1பேது.2:5,9) என்றும் வேதம் கூறுகிறது

[52] J.F.Walvoord, *The Revelation*, p. 106; H.M.Morris, *Revelation Record*, p. 87.

[53] இலங்கையில் இத்தகைய கலக்கம் அதிகமாக இருந்தது.

[54] http://www.chm.bris.ac.uk/motm/luciferin/luciferinh.htm

நொதியம் உபயோகிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், எந்தவொரு கொரோனா தடுப்பூசி மருந்திலும் இத்தகைய நொதியம் சேர்க்கப்படவில்லை. மேலும், "லூசி.ஃபெரின்" "லூஸி.ஃபெரேஸ்" என்னும் சொற்களை சாத்தான் என்று சொல்வது லத்தீன் மொழியையும் மருத்துவத்தையும் அறியாததினால் ஏற்பட்டுள்ள தவறான ஒரு கருத்தாகவே உள்ளது. ஏனெனில், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் போதிக்கின்றவிதமாக, லூசிபர் என்பது சாத்தானின் பெயர் அல்ல. ஏனெனில், கி.பி.4ஆம் நூற்றாண்டில் வேதாகமம் லத்தீனுக்கு மொழிபெயர்க்கப்பட்டபோது, ஏசாயா 14:12இலுள்ள விடிவெள்ளி என்னும் சொல், அம்மொழியில் லூசிபர் என்று குறிப்பிடப்பட்டது. ஏனெனில், லத்தீன் மொழியில் லூசிபர் என்பது விடிவெள்ளி என்னும் அர்த்தமுள்ள சொல்லாகும். இதனால்தான், வெளிப்படுத்தல் 2:28இலும், 22:16இலும், விடிவெள்ளி என்னும் சொல் லத்தீன் மொழிபெயர்ப்பில் லூசிபர் என்றே உள்ளது. ஆனால், கி.பி.4ஆம் நூற்றாண்டின் பின்னர் சில சபைத் தலைவர்கள் சாத்தானின் வீழ்ச்சியைப்பற்றியே ஏசாயா முன்னறிவிப்பதாகப் போதித்ததினால், லத்தீன் மொழியில் விடிவெள்ளி என்னும் அர்த்தமுள்ள லுசிபர் என்னும் சொல் சாத்தானின் பெயராகிவிட்டது. ஆனால், எபிரெய கிரேக்க வேதப்பிரதிகளில் சாத்தானுக்கு இப்படியொரு பெயர் இல்லை. மேலும், ஏசாயா 14ஆம் அதிகாரம் சாத்தானைப்பற்றி தீர்க்கதரிசனமும் அல்ல.[55] ஏனெனில், இது பாபிலோன் ராஜாவுக்கு எதிரான தீர்க்கதரிசனம் என்பதை 4ஆம் வசனம் அறியத்தருகிறது.[56]

ஏசாயா சாத்தானைப்பற்றியே குறிப்பிடுகிறார் என்னும் தவறான வேதவியாக்கியானமே அவனுக்கு லூசிபர் என்னும் தவறான பெயர் கொடுக்கப்படுவதற்கு காரணமாயுள்ளது. ஆனால், லூசிபர் என்பது பிரகாசம் இல்லது பிரகாசித்தல் என்னும் அர்த்தமுள்ள லத்தீன் மொழிச் சொல்லாகும். வேதாகமத்தில் சாத்தான் என்பது எதிரி என்னும் அர்த்தமுடைய எபிரெயச் சொல்லாகும். இதுவே எபிரெய வேதத்தில் சாத்தானுடைய பெயராகவும் உள்ளது. இதனால்தான், புதிய ஏற்பாட்டில் "டயபோலொஸ்" என்னும் கிரேக்கச் சொல் சாத்தானுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. இதனர்த்தம் "எதிராகப் பேசுதல்" என்பதாகும். ஏனெனில், சாத்தான் தேவனுடைய எதிரியாகவும், எப்பொழுதும் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் எதிராகப் பேசுகிறவனாகவும் இருப்பதினால் (வெளி.12:10)[57] அவன் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளான். இதனால்தான், "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேது.5:8) என்று பேதுரு சாத்தானை வர்ணித்துள்ளார். எனவே, பிரகாசித்தல் என்னும் அர்த்தமுள்ள "லூஸி.ஃபெரின்" என்னும் லத்தீன் மொழிச் சொல்லின் அர்த்தத்தை அறியாமல் கொரோனா தடுப்பு ஊசிகளை சாத்தானின் ஊசிகளாகக் கருதுவது, வேதசத்தியத்தையும் மருத்துவத்தையும் அறியாத தவறான போதனையாகவே உள்ளது. இதனால், கொரோனா தடுப்பு ஊசிகளைப்பற்றி எவ்வித பயமும் கலக்கமும் அடையத் தேவையில்லை. இதற்கும் சாத்தானுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஏனெனில், இது சாத்தானின் அடையாளம் அல்ல. ஆனால், நோய்கள் ஏற்பட்டால் மருந்துகள் எடுப்பதும்,

---

[55] J.N.Oswalt, *Isaiah 1-39: The New International Commentary on the Old Testament*, pp. 320-322.

[56] சாத்தானைப்பற்றிய விவரணமாக வியாக்கியானம் செய்யப்படும் ஏசாயா 14ம் அதிகாரத்தின் 12 முதல் 14 வரையிலான வசனங்களில் பாபிலோனிய அரசன், தன்னைப்பற்றிய பெருமிதத்தில் பேசியவைகளும் சிந்தித்தவைகளுமே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஏனெனில், "பாபிலோனிய ராட்சியத்தை ஆட்சி செய்த அரசன் பெருமையுள்ளவனாகவும் பரலோகத்திலிருக்கும் தேவனுடைய இடத்தை அடைய வேண்டும் என்னும் எண்ணமுடையவனாகவும் இருந்துள்ளதையே இவ்வசனங்கள் அறியத்தருகின்றன." (G.V.Smith, *Isaiah 1-39: The New American Commentary*, p. 314). உண்மையில், இவ்வசனங்கள் "மானிடப் பெருமையின் வெளிப்பாடாகவும்," (J.N.Oswalt, *Isaiah 1-39: The New International Commentary on the Old Testament*, p. 320). "தேவனாக வேண்டும் என்னும் மனிதனின் பேராசையின் வார்த்தைகளாகவுமே உள்ளன." (D.E.Gowan, *When Man Becomes God: Humanism and Hubris in the Old Testament*, pp. 66-67). எனவே, இவற்றை எவ்விதத்திலும் ஆவியுலக ஜீவிகளான சாத்தானினதோ, அல்லது அவனுடன் இருக்கும் தூதர்களினதோ வார்த்தைகளாகக் கருத முடியாது. ஏனெனில், இங்கு பாபிலோனிய அரசனுக்கு ஏற்படப்போகும் அழிவைப்பற்றியே முன்னறிவிக்கப்பட்டுள்ளது. இதனால்தான், விடிவெள்ளி என்று மாத்திரம் குறிப்பிடாமல், "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி" என்று பாபிலோனிய அரசனை ஏசாயா அழைத்துள்ளார். ஏனெனில், அதிகாலையில் மானிடக் கண்களுக்குத் தென்படும் விடிவெள்ளியை (அதாவது வெள்ளி என்னும் கிரகத்தை), சூரியன் உதயமாகியவுடன் மனிதர்களினால் பார்க்கமுடியாமல் போய்விடுவதுபோலவே, பாபிலோனிய அரசனும் இருந்த இடம் தெரியாமல் போகும்விதத்தில் அழிந்துபோவான் என்பதற்காகவே ஏசாயா அவனை அதிகாலையின் மகனான விடிவெள்ளியாக சித்தரித்துள்ளார். (J.Goldingay, *Isaiah: New International Biblical Commentary*, p. 103). இதனால்தான், "நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே" என்றும் 12ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

[57] சாத்தான் "இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன்" என்று வெளிப்படுத்தல் 12:10இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

நோய்கள் வராமலிருப்பதற்காகத் தடுப்பு ஊசிகள் போடுவதும் அவிசுவாசத்தின் அடையாளம் என்றும் சில கிறிஸ்தவர்கள் கருதுவதினாலும், கொரோனா தடுப்பு ஊசிகளைப்பற்றிய தவறான எண்ணமுடையவர்களாக இருக்கின்றனர். இதைப்பற்றி அடுத்த பகுதியில் பார்ப்போம்.